

சென்னை, தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழக கூட்ட அரங்கில் 23.06.2025 அன்று பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யா மொழி தலைமையில் கன்னியாகுமரி, மயிலாடுதுறை உள்ளிட்ட 13 மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கான ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழக மேலாண் இயக்குநர் மரு. பொ.சங்கர், மாதிரிப்பள்ளிகள் உறுப்பினர் செயலர் சுதன், (ஓய்வு), பள்ளிக் கல்வி இயக்குநர் முனைவர் ச.கண்ணப்பன், தொடக்கக் கல்வி இயக்குநர் முனைவர் பூ.ஆ.நரேஷ், அரசுத் தேர்வுகள் இயக்குநர் திருமதி லதா, மாநில கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவன இயக்குநர் திருமதி உமா, தனியார் பள்ளிகள் இயக்குநர் குப்புசாமி, இணை இயக்குநர்கள், முதன்மைக் கல்வி அலுவலர்கள், மாவட்டக் கல்வி அலுவலர்கள் (தொடக்கக்கல்வி), மாவட்டக் கல்வி அலுவலர்கள் (தனியார் பள்ளிகள்) ஆகியோர் கலந்து கொண்டனர்.

### தொடக்கக் கல்வித்துறை காலியிடங்களில்

# 2,346 இடைநிலை ஆசிரியர்கள் ஜூலை மாதம் நியமனம்!

## அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தகவல்!

சென்னை, ஜூன் 25 -

தொடக்க கல்வித்துறையில் காலியாக உள்ள பணியிடங்களை நிரப்பும் வகையில் ஜூலை மாதம் 2346 இடைநிலை ஆசிரியர்கள் நியமிக்கப்படுவார்கள், என்று பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி தெரிவித்துள்ளார்.

அனைத்து மாவட்ட முதன்மை கல்வி அலுவலர்கள் மற்றும் மாவட்ட கல்வி அலுவலர்களுக்கான ஆய்வு கூட்டம் சென்னையில் நேற்று முன்தினம் காலை நடந்தது. இதில் 25 மாவட்டங்களைச் சேர்ந்த முதன்மை கல்வி அலுவலர்கள், மாவட்ட கல்வி அலுவலர்கள் (தொடக்ககல்வி) மற்றும் மாவட்ட கல்வி அலுவலர்கள் (தனியார் பள்ளிகள்) பங்கேற்றனர்.

கூட்டத்தில், பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி தலைமை வகித்து கூறியதாவது:

பள்ளிக் கல்வித்துறையில் மேற்கொள்ளப்பட்டுள்ள சாதனைகள், திட்டங்கள், மாணவ மாணவியருக்கு வழங்கப்படும் கல்வி உதவித் தொகைகள் மற்றும் நலத்திட்ட உதவிகள் அனைத்தும் முறையாக அனைத்து மாணவ, மாணவியருக்கு சென்று சேர்கிறதா என்பதை முறையாக கண்காணிக்கவும், நல்ல சமுதாயத்தை உருவாக்குவதன் பொறுப்பும் பள்ளி கல்வி துறைக்கு உள்ளது.

எனவே இந்த நல்ல வாய்ப்பை பயன்படுத்தி பள்ளிக் கல்வித்துறை அலுவலர்கள் முனைப்புடன் பணியாற்றி ஆய்வு கூட்டத்தின் நோக்கத்தை நிறைவேற்ற வேண்டும்.

இதுவரை அரசு மற்றும் அரசு நிதியுதவி பெறும் பள்ளிகளில் 3 லட்சத்து 35 ஆயிரம் மாணவர்கள் சேர்க்கை பெற்றுள்ளனர். அதற்காக உழைத்த அலுவலர்களை பாராட்டியுள்ளோம்.

தொடக்க கல்வி இயக்ககத்தில் வருகிற ஜூலை மாத இறுதிக்குள் 2346 இடைநிலை ஆசிரியர்கள் பணி நியமனம் செய்யப்பட உள்ளனர். அதற்காக நிலுவையில் உள்ள நீதிமன்ற வழக்குகளை விரைவில் முடிக்க நடவடிக்கை மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இவ்வாறு அவர் பேசினார்.

இந்த கூட்டத்தில் பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழக மேலாண் இயக்குனர் சங்கர், மாதிரிப் பள்ளிகள் உறுப்பினர் செயலர் சுதன், பள்ளி கல்வி இயக்குனர் கண்ணப்பன், தொடக்க கல்வி இயக்குனர் நரேஷ், அரசு தேர்வுகள் இயக்குனர் லதா, மாநில கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவன இயக்குனர் உமா, தனியார் பள்ளிகள் இயக்குனர் குப்புசாமி உள்ளிட்ட இணை இயக்குனர்கள், கல்வி அலுவலர்கள் கலந்துகொண்டனர். இந்த ஆய்வுக் கூட்டம் இன்றும் தொடரும். அதில் தர்மபுரி, கிருஷ்ணகிரி, நீலகிரி, கோவை, கரூர், நாமக்கல், திருப்பத்தூர், வேலூர், ராணிப்பேட்டை, திருவள்ளூர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு, சென்னை மாவட்டங்களை சேர்ந்த அதிகாரிகள் பங்கேற்றனர்.

## மாதவரத்தில் நல உதவிகள்!

சென்னை, ஜூன் 25 –

சென்னை வடகிழக்கு மாவட்டம் மாதவரம் வடக்கு பகுதியில் முத்தமிழ் அறிஞர் ஐயா கலைஞர் அவர்களின் பிறந்தநாள் விழாவை முன்னிட்டு, முதியோர் காப்பகத்தில் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது.

மாதவரம் வடக்கு பகுதி திமுக சார்பில் பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் நிகழ்ச்சி ஏற்பாட்டில், 17வது வட்டம் தீயம்பாக்கம் டீ கப் மினிஸ்ட்ரிஸ் முதியோர் காப்பகத்தில் வசிக்கும் முதியோர்க ளுக்கு, மதிய உணவு மற்றும் அத்தியாவசிய பொருட்கள் வழங்கும் விழா நடைபெற்றது.

17 வது வட்டச் செயலாளர் கே. கருணாகரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சிக்கு, வட்டக் கழக நிர்வாகிகள் சி. பாலாஜி, சி. மூர்த்தி, பகுதி இளைஞரணி துணை அமைப்பாளர் எம். என். அஜய் தென்னவன், பாக முகவர் டி. திவாகர், எம். ஜான்சன், இ. சுதர்சன், எஸ். ஜோசப் ஜி. பூபாலன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

முதியோர் காப்பகத்தில் வசிக்கும் முதியோர்களுக்கு அறுசுவை பிரியாணி மற்றும் அத்தியாவசிய பொருட்களை மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் வழங்கினார்.

### திருச்சி - பெரம்பலூர் - மயிலாடுதுறை உள்ளிட்ட 9 மாவட்டங்களில்

# பாக நிலை முகவர்கள் கூட்டம்!

## கழக முதன்மைச் செயலாளர் – அமைச்சர் கே.என்.நேரு அறிவிப்பு!



கழக தலைவர் அவர்களின் ஆணைப்படி, திருச்சிராப்பள்ளி, பெரம்பலூர், மயிலாடுதுறை, நாகப்பட்டினம், திருவாரூர், தஞ்சாவூர், அரியலூர், புதுக்கோட்டை மற்றும் கடலூர் (மேற்கு) மாவட்டங்களில் பாக நிலை முகவர்கள் 2 (BLA2) கூட்டத்தில் மாவட்ட செயலாளர்கள், அமைச்சர் பெருமக்கள், தொகுதி பொறுப்பாளர்கள், மாநில மாவட்ட நிர்வாகிகள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மாநகர, நகர, பேரூர் கழக செயலாளர்கள், ஒன்றிய செயலாளர்கள், பகுதி செயலாளர்கள் மற்றும் அணிகளின் அமைப்பாளர்கள் கலந்து கொள்கின்ற கூட்டத்தை கீழ்கண்ட தேதிகளில் சம்பந்தபட்ட மாவட்ட செயலாளர்கள் கூட்டிடுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

| நாள் | நேரம் | இடம் |
|---|---|---|
| 25.06.2025 | நண்பகல் 12.00 மணி | திருச்சி வடக்கு மாவட்டம் |
| 26.06.2025 | காலை 10.00 மணி<br>மாலை 4.00 மணி | திருச்சி மத்திய மாவட்டம்<br>திருச்சி தெற்கு மாவட்டம் |
| 27.06.2025 | காலை 10.00 மணி<br>மாலை 4.00 மணி | நாகப்பட்டினம்<br>மயிலாடுதுறை மாவட்டம் |
| 28.06.2025 | காலை 9.30 மணி<br>மதியம் 12.30 மணி<br>மாலை 4.30 மணி | தஞ்சாவூர் தெற்கு மாவட்டம் பட்டுக்கோட்டை<br>தஞ்சாவூர் வடக்கு மாவட்டம் கும்பகோணம்<br>தஞ்சாவூர் மத்திய மாவட்டம் தஞ்சாவூர் |

**கே.என்.நேரு**

கழக முதன்மைச் செயலாளர் / நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்



பெரம்பலூர் மாவட்டத்தில், கலைஞர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு, மாவட்ட மகளிர் அணி மற்றும் மகளிர் தொண்டர் அணி சார்பில் புகழரங்கம் நிகழ்ச்சி, மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் மகாதேவி ஜெயபால் தலைமையில், மாவட்ட மகளிர் தொண்டர் அணி அமைப்பாளர் புஷ்பவள்ளி ராஜேந்திரன் வரவேற்புரையில், மாவட்ட கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன் முன்னிலையில் நடை பெற்றது. இதில் போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் சட்டமன்ற உறுப்பினர் எம். பிரபாகரன் வழக்கறிஞர் அ.அருள்மொழி சேலம் சுஜாதா பட்டிமன்ற பேச்சாளர் மலர்விழி இளம் பேச்சாளர் ந.காருண்யா ஆகியோர் கலந்து கொண்டு ஆகியோர் சிறப்புரை யாற்றினார்கள்.

# விழுப்புரம் தெற்கு மாவட்டத்தில் தெருமுனைப் பிரச்சாரக் கூட்டங்கள்!

## மாவட்டப் பொறுப்பாளர் பொன்.கௌதமசிகாமணி அறிவிப்பு!

விழுப்புரம், ஜூன் 25 -

விழுப்புரம் (தெற்கு) மாவட்ட தி.மு.க. பொறுப்பாளர் டாக்டர் பொன். கௌதமசிகாமணி அறிக்கை வருமாறு :-



விழுப்புரம் (தெற்கு) மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 102 வது பிறந்த நாள் மற்றும் திராவிட மாடல் அரசின் நான்காண்டு கால சாதனைகளை விளக்கிடும் தெருமுனைப் பிரச்சாரக் கூட்டங்கள் 25-06-2025 முதல் 30-06-2025 வரை நடைபெற உள்ளது.

கழக மண்டல பொறுப்பாளர் -வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் - திருக்கோவிலூர் சட்டப் பேரவை உறுப்பினர் முனைவர் க.பொன்முடி ஆகியோர்சிறப்புரையாற்ற உள்ள இக்கூட்டங்களுக்கு மாவட்ட கழக பொறுப்பாளர் டாக்டர் பொன். கௌதமசிகாமணி தலைமை ஏற்க உள்ளார்.

25-06-2025 இன்று திருக்கோவிலூர் கிழக்கு (பேச்சாளர்-ஸ்ரீராம்) மற்றும் விக்கிர வாண்டி கிழக்கு (பேச்சாளர்கள்-காசி.விஸ்வநாதன், வே. வல்லபராசு) ஒன்றியங்களிலும்,

26-06-2025 அன்று மணம்பூண்டி ஒன்றியம் ( பேச்சாளர்-யாசர் அராபத்), அரகண்டநல்லூர் பேரூர் (பேச்சா ளர்-சேர்க்காடு கென்னடி) காணை வடக்கு (பேச்சாளர்-ஸ்ரீராம்) ஒன்றியங்களிலும்,

27-06-2025 அன்று காணை தெற்கு (பேச்சாளர்-எழும்பூர் கோபி) திருவெண்ணெய் நல்லூர் பேரூர் (பேச்சாளர்-அப்துல் வகாப்) ஆகிய இடங்களிலும்,

28-06- 2025 அன்று காணை மத்திய (பேச்சாளர்-எழும்பூர் கோபி), முகையூர் வடக்கு (பேச்சாளர்-இன்பக்குமரன்), திருக்கோவிலூர் நகரம் (பேச்சாளர்கள்-கீர்த்தனா, வி.ஆர்.ரவிச்சந்திரன்), விக்கிரவாண்டி பேரூர் (பேச்சாளர்கள்-கே.அஸ்வின் குமார், ப.அன்பரசு) ஆகிய இடங்களிலும்,

29-06-2025 அன்று விக்கிரவாண்டி மேற்கு (பேச்சாளர்-ஆரணி மாலா), திருவெண்ணெய் நல்லூர் மேற்கு (பேச்சாளர்-தூத்துக்குடி சரத்பாலா), கோலியனூர் மேற்கு (பேச்சாளர்கள்-ரோஜா, காசி. கலைச்செல்வன்) ஆகிய இடங்களிலும்,

30-06-2025 அன்று முகையூர் தெற்கு (பேச்சாளர்-சேலம் சுஜாதா), விக்கிரவாண்டி மத்திய (பேச்சாளர்-சிறுவானூர் பரசுராமன்) ஆகிய இடங்களில் நடைபெறுகிறது.

சட்டப்பேரவை உறுப்பினர் - மாநில விவசாய தொழிலாளர் அணி செயலாளர் அன்னியூர் சிவா, மாவட்ட ஊராட்சிக்குழு தலைவர் - மாவட்ட கழக அவைத் தலைவர் ம.ஜெயச்சந்திரன், மாவட்ட துணைச் செயலாளர்கள் டி.என்.முருகன், இரா.கற்பகம், தலைமைக் கழக வழக்கறிஞர் சுவை.சுரேஷ், மாநில மகளிர் அணி பிரச்சாரக் குழு செயலாளர் மோ.தேன்மொழி, தலைமை செயற்குழு உறுப்பினர்கள் அப்துல் சலாம், டி.செல்வராஜ் மற்றும் பொதுக்குழு உறுப்பினர்கள் கலந்துகொள்ள இருக்கும் இக்கூட்டங்களில் ஒன்றிய - நகர - பேரூர் கழக செயலாளர்கள் உள்ளிட்ட நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள் , உள்ளாட்சி பிரதிநிதிகள் உள்ளிட்ட கழகத் தோழர்கள் அனைவரும் கலந்து கொள்ள கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.



தஞ்சை மாவட்டம், பேராவூரணி வட்டம், ஊமத்தநாடு ஊராட்சியில் நடைபெற்ற மூன்றாம் கட்ட மக்களுடன் முதல்வர் திட்டத்தை உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன் துவக்கி வைத்து நலத்திட்ட உதவிகளை வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சியர் பிரியங்கா பங்கஜம், தஞ்சை தெற்கு மாவட்டச் செயலாளர் தி.பழனிவேல், என்.அசோக்குமார் எம்.எல்.ஏ, ஆர்.டி.ஓ சங்கர், ஒன்றியச் செயலாளர் ரவிச்சந்திரன் உள்ளிட்ட அரசு அதிகாரிகள், கழக நிர்வாகிகள் உள்ளனர்.




பெரம்பலூர் மாவட்ட செயற்குழுக் கூட்டம் மாவட்ட அவைத் தலைவர் அ.நடராஜன் தலைமையில் நடை பெற்றது. இதில் மாவட்டக் கழகப் பொறுப்பாளர் வீ.ஜெகதீசன் சட்டமன்ற உறுப்பினர் எம். பிரபாகரன் தொகுதி பார்வையாளர் தங்க.சித்தார்த்தன் ஏ.கே.அருண் கலந்து கொண்டு சிறப்புரை யாற்றினார்கள்.

### திருவொற்றியூரில் — மீன்பிடிக்கும் போது இறந்த

# மீனவர் குடும்பத்திற்கு ரூ.1 லட்சம் நிதியுதவி!

## கே.பி. சங்கர் எம்.எல்.ஏ. வழங்கினார்!

சென்னை, ஜூன் 25 -

திருவொற்றியூரில் மீன்பிடிக்கும் போது இறந்த மீனவர் குடும்பத்திற்கு கழக மீனவரணி சார்பில் ரூ.1 லட்சம் நிதியுதவி மாநில மீனவரணி துணை தலைவர், திருவொற்றியூர் சட்டமன்ற உறுப்பினர் கே.பி. சங்கர் வழங்கினார்.

திருவொற்றியூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பலகை தொட்டி குப்பத்தை சேர்ந்த சுப்பிரமணி (வயது 51) என்பவர் கடந்த 18-ஆம் தேதி அன்று அதிகாலை கடலில் மீன் பிடித்துவிட்டு, காலை கரை திரும்பியபோது கடல் அலை சீற்றத்தால் படகு கவிழ்ந்தது.

இதில் மயக்கம் அடைந்த மீனவர் சுப்பிரமணியை சக மீனவர்கள் மீட்டு அரசு ஸ்டான்லி மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். ஆனால் செல்லும் வழியில் அவர் உயிரிழந்தார்.

இதனை அறிந்து திருவொற்றியூர் போலீசார் வழக்குப்பதிவு செய்து, பிறகு பிரேத பரிசோதனைக்கு அனுப்பி வைத்தனர், பிறகு அவரது உடல் குடும்பத்தா ரிடம் ஒப்படைக்கப்பட்டது.

இதனை அறிந்த திருவொற்றியூர் சட்டமன்ற உறுப்பினரும், மாநில மீனவரணி துணை தலைவருமான கே.பி. சங்கர் உயிரிழந்த சுப்பிரமணி உடலுக்கு மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தி, குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார்.

அதனைத் தொடர்ந்து உயிரிழந்த சுப்பிரமணியன் குடும்பத்தாருக்கு மாநில மீனவரணி சார்பில் ரூபாய் 1 லட்சம் நிதி உதவி வழங்கினார்.

வடகிழக்கு மாவட்ட மீனவர் அணி செயலாளர் கே.தேசிங்கு, துணை செயலாளர்கள் டி.மகேந்திரன், எஸ். செல்வம், குமரன், பலகை தொட்டி குப்பம் கிராம நிர்வாகிகள் ராமச்சந்திரன், மதுரை முத்து, ஜோதி, ராஜேந்திரன் மற்றும் கிராம பொதுமக்கள் உடன் இருந்தனர்

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### ஜி.பி. சோமசுந்தரம்
### ஜூன் 25 (1971)



கழகத்தின் முதுபெரும் தலைவர். “பட்டாளத்துச் சிங்கம்” எனவும், “சேலத்துப் பெரியார்” எனவும் கழகத் தோழர்களால் அன்போடு அழைக்கப்பட்டவர்.

திராவிட இயக்கத் தொடக்க காலத்திலிருந்து தொண்டாற்றி வந்தவர். பேரறிஞர் அண்ணா அவர்களின் அன்புக்கும், மரியாதைக்கும் உரிய கழக முன்னணித் தலைவர்களில் முக்கியமானவராக விளங்கியவர்.

கழகத்தின் தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினராகவும் – சேலம் மாவட்டக் கழகச் செயலாளராகவும் – மாநிலங்களவை உறுப்பினராகவும் பணியாற்றியவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**